Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jmrgroup.org

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

தொகுதி - 6 | நாளிதழ் | 10 பக்கங்கள் சென்னை, 29 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 140

ஆப்கானிஸ்தானில் வெடிவிபத்து: 10 மாணவர்கள் உயிரிழப்பு, 100-க்கும் மேற்பட்டோர் காயம் – அதிகாரி தகவல்



சென்னை – 29 நவம்பர், 2026 குனார் மாகாணத் தலைநகர் அசதாபாதின் ஆன்டர்சேர் பகுதியில் சனிக்கிழமை காலை இந்தச் சம்பவம் நடந்ததாக தாலிபான் அரசின் உள்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

அருகிலுள்ள சுரங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான வெடிபொருள் கிடங்கில் ஏற்பட்ட "அலட்சியம் மற்றும் கவனக்குறைவே" வெடிப்புக்குக் காரணம் என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்ததாக அப்துல் மதீன் கானி எக்ஸ் தளத்தில் பதிவிட்டார்.

சம்பவம் குறித்த விசாரணை தொடர்வதாகவும் அவர் கூறினார்.

சுரங்கப் பணிக்காகவும் பாறைகளை வெடிவைத்துத் தகர்ப்பதற்காகவும் வெடிபொருட்கள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, அசதாபாதிலுள்ள ஷகாய் நடுநிலைப் பள்ளி அருகேயுள்ள ஒரு வீட்டில் இந்த வெடிப்பு நிகழ்ந்ததாக மாகாண கலாச்சார, தகவல் இயக்குநர் சமி உல் ஹக் பயான் தெரிவித்ததாகச் செய்திகள் கூறுகின்றன.

சேதமடைந்த வகுப்பறையின் உள்ளே எடுக்கப்பட்ட படங்களில், உடைந்த கண்ணாடித் துண்டுகளும் இடிபாடுகளும் சூழ்ந்த நிலையில் கைவிடப்பட்ட காலணிகளும் பள்ளிப் பைகளும் கிடப்பது தெரிகிறது.

சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட காணொளிகளில், காயமடைந்த பல குழந்தைகளை வாகனங்களிலிருந்து இறக்கி, அசதாபாத் மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்குத் தூக்கிச் செல்வதையும், பெருந்திரளான மக்கள் அதைப் பார்த்துக்கொண்டு நிற்பதையும் காண முடிகிறது.

மருத்துவமனைக்குள் எடுக்கப்பட்ட புகைப்படங்களில், தலையில் கட்டுப் போடப்பட்ட குழந்தைகள் அருகருகே படுக்கைகளில் படுத்திருப்பது தெரிகிறது.

ஆப்கானிஸ்தானில் சுரங்கத் தொழில் முக்கியத் தொழிலாக இருந்தாலும், பாதுகாப்புத் தரநிலைகள் பெரும்பாலும் மோசமாக இருப்பதால் விபத்துகள் நேர்கின்றன.